

கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளினை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி ஆலங்குடியில் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய கழகம் மற்றும் ஆலங்குடி பேரூர் கழகம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கினார். இந்நிகழ்வில் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பி. கே.டி.தங்கமணி, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், ஆலங்குடி பேரூர் கழக செயலாளர் ஆ.பழனிக்குமார், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அவரது தியாக வரலாறு, சாதனைத் திட்டங்களை நினைவு கூரும் வகையில், கரூர் மாவட்டம் நங்கவரம் மற்றும் மாயனூர் காவிரி கதவணையில் பிறந்தநாள் விழா நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ, தலைமை வகித்து பொதுமக்களுக்கு இனிப்புகள், உணவு, நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். எம்.எல்.ஏக்கள் இரா. மாணிக்கம், க.சிவகாமசுந்தரி, ஆர்.இளங்கோ, கழக நிர்வாகிகள் அருகில் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா:

# கலைஞர் சாதனை திட்டங்களை விளக்கி பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி பங்கேற்றார்!

கரூர், ஜூன் 5 -

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது தியாக வரலாறு சாதனைத் திட்டங்களை நினைவுகூரும் வகையில், கரூர் மாவட்டம் நங்கவரம், மற்றும் மாயனூர் கதவணையில் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்ற விழாவில் நலத்திட்ட உதவிகள், இனிப்புகள் வழங்கினார்.

தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் 102 இடங்களில் அவரது சாதனைத் திட்டங்களையும், தியாக வரலாற்றையும் நினைவு கூரும் வகையில் கழகம் கொண்டாடி வருகிறது. அந்த வகையில் கரூர் மாவட்டம் நங்கவரம் மற்றும் மாயனூரில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்எல்ஏ தலைமையில், கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா நடைபெற்றது. குளித்தலை நங்கவரத்தில் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், உணவு வழங்கினார்.

குளித்தலை தொகுதியில் கலைஞர் அவர்கள் முதன் முதலில் 1957 ல் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அந்த காலகட்டத்தில் நங்கவரத்தில் 1956 ம் ஆண்டு அவரது தலைமையில் நடந்த நங்கவரம் பண்ணையை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். பண்ணையார்களின் 33412 ஏக்கர் நிலங்களை விவசாயிகள் குத்தகைக்கு எடுத்து பன்னெடுங்காலமாக சாகுபடி செய்து வந்தார்கள். நில உச்சவரம்பு சட்டப்படி நிலங்களை விவசாயிக ளுக்குத் தராததால் போராட்டத்தில் குதித்தனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணையை ஏற்று, 1956ல் அந்தப் போராட்டத்தில் விவசாயிகளோடு கலைஞர் அவர்கள் போராட்டம் நடத்தினார். ‘உழுதவனுக்கே நிலம் சொந்தம்’, ‘நாடு பாதி, நங்கவரம் பாதி’ என்ற கோஷங்களோடு தொடர் போராட்டம் நடத்தியதையடுத்து விவசாயிகளுக்கு நிலங்களை கொடுக்க ஒப்புக்கொண்டனர்.

இதனால் குளித்தலை தொகுதியில் உள்ள 50 கிராம விவசாயிகள் மத்தியில் கலைஞருக்கு பெரும் செல்வாக்கு உண்டானது. அதனாலே தனது சொந்த ஊரான தஞ்சாவூரில் நிற்காமல் முதல் தேர்தலில் குளித்தலையில் நின்று வெற்றி பெற்று முதன்முறையாக 1957ல் சட்டமன்றத்தில் காலடி எடுத்து வைத்தார்கள்.

இதேபோன்று மாநில நதிநீர் இணைப்பு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வந்தது கலைஞர் அவர்கள் ஆட்சியில் இந்த கோரிக்கையை நிறைவேற்றினார். காவிரி குண்டாறு இணைப்பு திட்டம் தொடங்கப்பட்டது. மேலும் கரூர் மாவட்டம் நீர் பாசனம், குடிநீர் ஆதாரம் பெறுகின்ற வகையில், மாயனூரில் காவிரி ஆற்றின் குறுக்கே கதவணை கட்டினார். ஒரு டிஎம்சி தண்ணீர் கதவணையில் தேக்கி வைக்கப்படுகிறது.

மேலும் இப்பகுதியில் இருந்து நாமக்கல் மாவட்டம் சென்றுவர 45 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டி இருந்தது. பொதுமக்கள் இந்த சிரமத்தை போக்குகின்ற வகையில் பாலத்துடன் கதவணை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். இதனை நினைவு கூரும் வகையில் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மாயனூர் கதவணை அருகே நடைபெற்றது. கரூர் மாவட்ட செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ, கலைஞர் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். எம்எல்ஏக்கள் இரா.மாணிக்கம், க.சிவகாமசுந்தரி, ஆர். இளங்கோ, கழக மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை செம்மொழி தினமாக கொண்டாடும் வகையில் புதுக்கோட்டை மாநகர தி.மு.க. சார்பில் திருவுருவப் படத்திற்கு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து மாநகர தி.மு.க. பொறுப்பாளர் வே.ராஜேஷ் ஏற்பாட்டில் 1000நபர்களுக்கு அசைவ உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, த.சந்திரசேகரன், கே.எஸ்.சந்திரன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர திமுக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழின தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மத்திய மாவட்டம், பெருந்துறை நால்ரோட்டில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு ஈரோடு மத்திய மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் மலர்தூவி, மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். நிகழ்வில் டி.ஜி.கே.பூபதி, பெருந்துறை ஒன்றிய செயலாளர்கள் பெரியசாமி, பால்சின்னுசாமி, டி.பி.கனகராஜ், அகரம் திருமூர்த்தி, ஒ.சி.வி.ராஜேந்திரன், குருசாமி, தங்கமுத்து, செந்தில்முருகன், ஜி.கே.செல்வன், பாக்கியலட்சுமி, ராசு, சென்னியப்பன், வக்கீல் பாலு, செந்தில்குமார், வசந்த், வெங்கடாசலம், ரவி, திருவாச்சி மூர்த்தி, பழனிச்சாமி, லாரன்ஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வரலாறு விடுதலையான நாளும் கூட!

## “கணையாழி” தலையங்கம்!




திருவள்ளுவரைச்
சனாதன துறவியாக்கிட
ஆளுநர் தீட்சை வழங்க
மேற்கொள்ளும் முயற்சியை
செம்மொழி நாள் அறிவிப்பால்
முறியடித்திருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!

திருவள்ளுவரை உலக மானுடநேயச்
சிந்தனையாளராகக் காட்டும்
பிறப்பொக்கும் எல்லா உ யிர்க்கும் என்ற
முழக்கத்தை முன்வைத்துச்
உலகச் செம்மொழி மாநாடு நடத்திய
முத்தமிழ் அறிஞர் பிறந்த நாளைச்
செம்மொழி நாளாகக் கொண்டாட
அறிவித்திருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!

வாழ்ந்த காலத்தை
வரலாறு ஆக்கியவர்
கலைஞர் என்றால்
வாழும் காலத்தை
வரலாறு ஆக்குகிறார்.
தமிழ்நாடு முதலமைச்சர்!

வரலாறு கைது செய்யும் என்று
ஒதுங்கி நிற்காமல்
வரலாறு விடுதலை செய்யும் என்று
காத்திருக்காமல்
மொழி, இன வரலாற்றின்
விடுதலைக்காகக்
களத்தில் நின்று போராடிய
கலைஞரின் பிறந்தநாளைச்
செம்மொழி நாளாக அறிவித்திருக்கிறார்.
தமிழ்நாடு முதலமைச்சர்!

மொழித் தீண்டாமையால்
முடக்கப்பட்டிருந்த தமிழை -
1856 இல் கால்டுவெல்
தொடங்கி வைத்த
உயர் தனிச் செம்மொழிக்
கொள்கையை -
1887 இல்

பரிதிமார் கலைஞர் கோரிக்கையாக்கினார்.
கோரிக்கையின் தொடர் முழக்கப்
போராட்டத்தைக் கையில் எடுத்து

இந்திய நாடாளுமன்ற
இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில்
அன்றைய குடியரசுத் தலைவர்
அப்துல் கலாமை
அறிவிக்கச் செய்தவர்
முத்தமிழ் அறிஞர் கலைஞர்.
அறிவித்த மாதம்
கலைஞர் பிறந்த ஜீன் மாதம்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி
அமைச்சரவை கூடி அறிவித்தது
அறிஞர் அண்ணா பிறந்த
செப்டம்பர்!
“தந்தை பெரியார் என்னைத்
தட்டிக் கொடுத்துப் பாராட்டிய போது
அறிஞர் அண்ணா அரவணைத்து
அன்புமழை பொழிந்த போது
அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடானது
செம்மொழி அறிவிப்பு” என்று
கொண்டாடியவர் கலைஞர்!

இந்தியாவில் இதுவரை
அறிவிக்கப்பட்டுள்ள
செம்மொழிகள் 11.
அவற்றுள்
முதலில் இருப்பது தமிழ் மொழி.

ஒன்றிய அரசு
தமிழைச் செம்மொழி என்று
அறிவித்த பின்புதான்
தமிழைக் காட்டி
வடமொழியே (2005) அறிவிக்கப்பட்டது.

அதன்பின் தெலுங்கு, கன்னடம் (2008)
மலையாளம் (2013) ஒடியா(2014).

அதன்பின் 2024 இல்
மராத்தி, பாலி, பிராகிருதம்
அசாமி, வங்காளம்
அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழைத் தொடர்ந்து
அறிவிக்கப்பட்டுள்ள
வடமொழி உட்பட
மற்ற 10 மொழிகளுக்கும்
தமிழே வழிகாட்டி -
முன்னுதாரணம் !

அப்படியென்றால்
முத்தமிழ் அறிஞர்
கலைஞர் பிறந்த நாளைத்
தமிழ்ச் செம்மொழி நாள் என்று
அறிவிக்காமல்
ஜூன் 3, செம்மொழி நாள் என்று
முதலமைச்சர் அறிவித்திருப்பது
தமிழர்கள் மட்டும் இல்லை
மற்ற 10 மொழிக்காரர்களும்
அவரவர் மொழி செம்மொழியான
நாளைக் கொண்டாடுவதோடு
அதற்குக் காரணமான
கலைஞர் பிறந்தநாளையும்
நன்றியுள்ளவர்கள்
கொண்டாட வேண்டும் என்பதைக்
குறிப்பால் உணர்த்துகிறது!

செம்மொழி என்றால்
தமிழைப் போலவே மக்களுக்குக்
கலைஞரும்
நினைவுக்கு வருகிறார் என்று
சென்னையில் கலைஞர் தொடங்கிய
செம்மொழிப் பூங்கா,
தொல்காப்பியப் பூங்கா எல்லாம்
சிறைப்பட்டுக் கிடந்தன
கடந்த ஆட்சியில்

சங்கத் தமிழ், தொல்காப்பியப் பூங்கா,
குறளோவியம் என்று
கடந்த காலத் தமிழின்
வாழ்வியல் சிந்தனைகளை
நவீன காலத்திற்குப் பொருத்திப்
பொதுமக்களிடமும்
கொண்டு சேர்த்தவர் கலைஞர்!

தமிழர்களின்
மூளை இழுப்பறைகளில்
சாதி, வருணக் கோட்பாடுகளால்
சிறையில் அடைக்கப்பட்டிருந்த
தமிழை
விடுதலை செய்தவர் கலைஞர்!
ஆகவே
ஜீன் 3
செம்மொழி நாள் மட்டுமில்லை
தமிழ் மொழி வரலாறு
விடுதலையான நாளும் கூட!



அன்புடன்
ம.ரா.

நன்றி: **“கணையாழி”** ஜீன் 2025